<u>சுருக்கம்</u>

கல்லூரிக் கல்வித் துறை – 2008–2009 ம் ஆண்டு பகுதி II திட்டம் – ஐந்து அரசு கலைக் கல்லூரிகளில் கணினித் துறை மற்றும் பிற துறைகளில், வசதிகளை மேம்படுத்த கணினி மற்றும் அதனை சார்ந்த உபகரணங்கள் வாங்க ரூ.88.00 இலட்சம் (தொடரா செலவினம்) அனுமதித்து –ஆணை வெளியிடப்படுகிறது.

---

உயர்கல்வி (ஜி.1)துறை

அரசு ஆணை (நிலை) எண்.231, ஆனி– 2.

திருவள்ளுவர்

ஆண்டு 2039,

நாள்:16.6.2008.

படிக்கப்பட்டது:

அரசாணை நிலை எண்.134, உயர்கல்வி நாள் 29.5.2007.

–––

ஆணை:

மேலே படிக்கப்பட்ட அரசாணையில் சென்னை மாநிலக் கல்லூரியில் எம்.சி.ஏ. பயிலும் மாணவர்களுக்காக கணினி உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த, முதல்நிலையாக 30 கணினிகள் வாங்க ரூ.10,50,000/– (ரூபாய் பத்து இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) தொடரா செலவினமாக 2007–2008 ஆம் ஆண்டு பகுதி II திட்டத்தின்கீழ் ஒப்பளித்து அரசு ஆணையிட்டுள்ளது.

2. கீழ்கண்ட ஐந்து அரசு கலைக் கல்லூரிகளில் கணினித் துறை மற்றும் பிற துறைகளில் வசதிகளை மேம்படுத்துவதற்கு இக்கல்லூரிகளில் கணினிகள் மற்றும் அதனை சார்ந்த உபகரணங்கள் வாங்குவதற்கு ரூ88.00 லட்சம் 2008–2009 ம் ஆண்டிற்கான பகுதி II திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யுமாறு கல்லூரிக் கல்வி இயக்குநர் அரசை கேட்டுக் கொண்டுள்ளார்.

1. டாக்டர் கலைஞர் அரசு கலைக்கல்லூரி, குளித்தலை (சட்டமன்ற பொன்விழா)
2. அரசு கலைக் கல்லூரி, சுரண்டை.
3. அரசு கலைக் கல்லூரி, கரூர்.
4. முத்துரங்கம் அரசு கலைக் கல்லூரி, வேலூர்.
5. எல்.ஆர்.ஜி அரசு மகளிர் கல்லூரி, திருப்பூர்.

| வ. எண். | கல்லூரியின் பெயர் | கூடுதலாக தேவைப்படும் கணினி மற்றும் துணை உபகரணங்கள் விவரம் | | தோராய மதிப்பீடு (லட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1 | டாக்டர் கலைஞர் அரசு கலைக்கல்லூரி, குளித்தலை (சட்டமன்ற பொன்விழா ) | கணினி | 50 | ரூ.20.00 (ரூ 40,000x50) |
| 2 | அரசு கலைக் கல்லூரி, சுரண்டை. | கணினி | 50 | 20.00 (ரூ 40,000 x 50) |

| | | | | |
|---|---|---|---|---|
| 3 | அரசு கலைக் கல்லூரி, கரூர். | கணினி | 40 | 16.00<br>(ரூ 40,000X40) |
| 4 | முத்துரங்கம் அரசு கலைக் கல்லூரி, வேலூர். | கணினி | 40 | 16.00<br>(ரூ 40,000 x 40) |
| 5 | எல்.ஆர்.ஜி. அரசு மகளிர் கல்லூரி, திருப்பூர். | கணினி | 40 | 16.00<br>(ரூ 40,000 x40) |
| மொத்தம் | | | | 88.00 |

(ரூபாய் எண்பத்திஎட்டு லட்சம் மட்டும்)

3. கல்லூரிக் கல்வி இயக்குநரின் கருத்துருவை ஏற்று மேற்குறிப்பிட்ட ஐந்து அரசு கலைக் கல்லூரிகளில் ஒவ்வொரு கல்லூரிக்கும் கணினித் துறை மற்றும் பிற துறைகளில் கணினி மற்றும் அதனைச் சார்ந்த உபகரணங்கள் வாங்குவதற்கு தொடரா செலவினமாக ரூ.88.00 லட்சம் ( ரூபாய் எண்பத்தி எட்டு லட்சம் மட்டும்) 2008–2009 பகுதி II திட்டத்தின்கீழ் ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி 3– ல் அனுமதிக்கப்பட்ட செலவினம் கீழ்கண்ட கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்பட வேண்டும்.

2202 பொதுக் கல்வி -03 பல்கலைக் கழக கல்வியும் உயர் கல்வியும் 103 அரசுக் கல்லூரிகளும், கல்வி நிறுவனங்களும் பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் – II மாநிலத் திட்டம் – JA அரசு கல்லூரிகளில் (ஆடவர் அல்லது மகளிர்) – பட்டப்படிப்பு தொடங்குதல் – வளர்ச்சிப் பணிகள் 76 கணினியும் துணைபாகங்களும் - 01 வாங்குதல்
(2202-03-103-JA 7612)

5. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண்.25244/Edn I /2008, நாள் 4.6.2008 வழங்கப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

க.கணேசன்,
அரசு செயலாளர்.

பெறுநர்
கல்லூரி கல்வி இயக்குநர், சென்னை–6.
மாநில கணக்காயர்,சென்னை – 9/18.
சம்பளக் கணக்கு அலுவலர்,சென்னை – 35/5 .
நிதி(கல்வி–1) துறை, சென்னை–9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.